முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1419

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.08.2023, வெள்ளிக்கிழமை

1. கார்மேக வள்ளலாய் கருணைகொண்டு
   கலியுகத்தில் ஞானமழை பொழிகின்ற
   பார்போற்றும் ஞானியே அரங்கனே
   பரந்தாமனே பரமானந்த ஞானகுருவே
2. குருவே கலியுகத்தின் ஞானியே
   கும்பன் முதல் உலக ஞானியர்களெல்லாம்
   பெருமைபட ஆசி அருள்கின்ற
   புண்ணியபலம் கொண்ட குருராஜனே
3. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   இனிதே சோபகிருது வேங்கைதிங்கள் இயம்பிடுவேன் ஞான அறிவுரைஆசி
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் முதல் நாள், 18.08.2023 வெள்ளிக்கிழமை)
   இணையில்லா தர்ம சக்தி கொண்ட அரங்கா
4. அரங்கனே தர்மத்தின் காவலனே
   அகிலத்தார்க்கு அழியாமை தந்தருளி
   வரங்கள் கொண்டே இந்த உலகமாற்றத்தை
   வடிவேலன் என் சக்திபட நடத்த வந்துள்ள
5. உள்ளதொரு ஞானியே ஓங்காரனே
   உண்மைபொருள் உன்வழி உலகோர் கண்டு
   மெய்ஞானியாக பேருலகமெல்லாம் பரவி
   மேலான மாற்றத்தை அரங்கன் உன் கருணையால் நடத்தி முடிப்பர்
6. அன்னதனால் உன் தர்மநெறி அறிந்து
   அரங்கன் உன் தயவுநெறி உணர்ந்து
   பெருமைகொண்டு உன்வழி வருவோரெல்லாம்
   பூவுலகில் என்னருள்பட ஞானி ஆவரப்பா

7. அப்பனே அற்புதத்தை உன்னைக்கொண்டு
ஆறுமுகன் கலியில் நடத்தி முடிப்பேன்
ஏற்புகொண்டு வருவோரெல்லாம்
இணைந்து உன்வழி ஞானிகளாக இந்த உலகை வென்று சிறப்பரப்பா

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–